# <u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.</u>

**முன்னிலை : செல்வி.எஸ். ஆக்னஸ் ஜெப கிருபா, எம்.எல்.,**

நீதித்துறை நடுவர், திருவையாறு.

**2026–ம் வருடம் ஜூன் மாதம், 19–ம் நாள், வெள்ளிக்கிழமை**

**<u>Cr.M.P.No.185/2026</u>**

சந்திரமோகன் (வயது 34/2026)
த/பெ. சேகர்,
வடக்குத் தெரு, தில்லைஸ்தானம்,
திருவையாறு. ... மனுதாரர் /எதிரி

//இடையே//

அரசுக்காக,
காவல் உதவி ஆய்வாளர்,
மருவூர் காவல் நிலையம்,
(குற்ற எண்.37/2025) ...எதிர்மனுதாரர்/குற்றமுறையிடுபவர்

இம்மனுவானது பிரிவு 503 & 497 BNSS–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு, 19.06.2026 இன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் இரண்டாம் நிலை அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M. முகேஷ், B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.

**<u>உத்தரவு</u>**

இவ்வழக்கில், நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ள மாட்டுவண்டியை இடைக்கால பொறுப்பில் மனுதாரருக்கு கொடுக்க உத்தரவிடக்கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1.** மனுதாரர் இவ்வழக்கின் எதிரி. மனுதாரரின் இரண்டு டயர் மாட்டு வண்டியை இவ்வழக்கில் சம்பந்தப்பட்டிருப்பதாக கூறி காவல் துறையினர் கைப்பற்றியுள்ளதாகவும், இம்மனுதாரர் மட்டுமே மாட்டுவண்டியின் உரிமையாளர் என்றும், மேற்படி மாட்டுவண்டி வெயிலிலும், மழையிலும் இருப்பதால் அதனுடைய மதிப்பு வீணாகும் என்றும், மேற்படி மாட்டுவண்டியின் மீது வேறு யாருக்கும் உரிமை கிடையாது எனவும், மேற்படி மாட்டுவண்டியை மனுதாரருடைய வசம் இடைக்கால பாதுகாப்பில் ஒப்படைக்குமாறும் மனுதாரர் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. அரசு தரப்பில் புலன் விசாரணை அதிகாரியால், இவ்வழக்கின் புலன் விசாரணை இன்னும் முடிவடையவில்லை என்றும், இம்மனுவை அனுமதித்தால் வழக்கு விசாரணையின்போது, வாகனத்தை நீதிமன்றத்தில் ஒப்படைக்கமாட்டார் என்றும், ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.06.19 17:16:27 +0530

3. அரசு தரப்பில் புலன் விசாரணை அதிகாரி கைப்பற்றிய வழக்குச் சொத்தை சி.பி.எண்.155/2026–ன் மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளார். வழக்கு சொத்தை காவல் நிலைய பராமரிப்பில் வைக்க உத்தரவிடப்பட்டதன்பேரில் வழக்குச் சொத்து தற்போது காவல் நிலைய பராமரிப்பில் உள்ளது.

4. இருதரப்பு கூற்றையும், ஆவணங்களையும் பரிசீலனை செய்ததில், மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின்படி, மனுதாரரிடமிருந்து மாட்டுவண்டி கைப்பற்றப்பட்டதாலும், மனுதாரர் தான் தான் சட்டப்படியான உரிமையாளர் என தெரிவித்துள்ளதை கருத்தில் கொண்டும், மாட்டுவண்டி வெயிலிலும், மழையிலும் இருந்தால் அதனுடைய மதிப்பு குறையும் என்பதை கருத்தில் கொண்டும், நீதியின் நலன் கருதியும், மேற்படி மனுதாரருக்கு கீழ்க்கண்ட நிபந்தனைகளின்பேரில் மாட்டுவண்டியை இடைக்காலமாக ஒப்படைக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**நிபந்தனைகள்:–**

1. மனுதாரர் மாட்டுவண்டியை நான்குபுறமும் நன்றாக தெரியும் வகையில், மனுதாரர் செலவில் தலைமை எழுத்தர் முன்னிலையில் புகைப்படம் எடுத்து குறுந்தகட்டுடன் (CD), பஞ்சநாமா தயாரித்தும் நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும்.

2. ரூ.50,000/–த்திற்கு மனுதாரரும், அதே தொகைக்கு மற்றொரு பிணையதாரரும் பிணையபத்திரம் எழுதித்தர வேண்டும்.

3. மாட்டுவண்டியை இந்நீதிமன்றம் உத்தரவிடும்போது திரும்ப இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும்.

4. மேற்படி மாட்டுவண்டியை விற்கவோ அல்லது உருமாற்றம் செய்யவோ வேறு எந்த குற்றச்செயல்களில் ஈடுபடுத்தவோ கூடாது.

5. மேற்படி மாட்டு வண்டியை வேறு குற்ற வழக்கில் ஈடுபடுத்தமாட்டேன் என பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்யவேண்டும்.

**முடிவாக,**

(1) **மேற்கண்ட நிபந்தனைகளின்படி மனுதாரர் மனுசொத்தை இடைக்காலமாக பெற்றுக்கொள்ளலாம் என உத்தரவிடப்பட்டு இம்மனு அனுமதிக்கப்படுகிறது.**

(2) **மனுதாரர் பிணையப்பத்திரம் எழுதி கொடுத்த உடன், இந்த உத்தரவின் நகலை காவல் துறைக்கு உடனடியாக அனுப்ப வேண்டும் என்றும், உத்தரவை பெற்றவுடன் காவல் துறையினர் வழக்கு சொத்தை மனுதாரருக்கு கொடுக்க வேண்டும் என்றும், இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கி சரிசெய்யப்பட்டு, இன்று **2026**–ம் ஆண்டு **ஜூன்** மாதம் **19**–ம் நாளான இன்று அவையறியப் பகரப்பட்டது.

AGNES JEBA KIRUBA S
Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.06.19 17:16:33 +0530

(ஒம்/–) செல்வி.எஸ்.ஆக்னஸ் ஜெப கிருபா.

நீதித்துறை நடுவர்,
திருவையாறு.